# வருடாந்த அறிக்கை
# 2013



## தாவரவியற் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம்

## தேசிய தாவரவியற் பூங்காக்கள் திணைக்களம்

பேராதனை

# இலங்கையில் தாவரவியற் பூங்காக்களின் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நம்பிக்கை நிதியம்

**ஆண்டறிக்கை – 2013 (Annual Report – 2013)**

இலங்கையில் தாவரவியற் பூங்காக்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் நலன்புரி நடவடிக்கைகளுக்கான நம்பிக்கை நிதியம் எனும் பெயரில் அப்போதிருந்த கமத்தொழில், காணி மற்றும் வனவள அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட 1995-12-15ஆம் திகதிய அமைச்சரவைக் குறிப்பினைக் கருத்திற் கொண்டு 1996-02-07ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தாவரவியற் பூங்காக்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் நலன்புரி நடவடிக்கைகளுக்கான நம்பிக்கை நிதியத்தை நிறுவுவதற்கான அங்கீகாரம் கிடைத்தது.

தாவரவியற் பூங்காக்களுக்கான நுழைவுச் சீட்டு விற்பனையின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் வருடாந்தம் 25% தாவரவியற் பூங்காக்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் நலன்புரி நடவடிக்கைகளுக்கான நம்பிக்கை நிதியம் எனும் பெயரில் வரவு வைக்கப்படும். இதற்காக ஒவ்வொரு வருடமும் திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட முன்மதிப்பீட்டில் 2201 செலவு விடயத்தின் (மூலதன மாற்றல்) கீழ் ஒதுக்கம் மேற்கொள்ளப்படும். நிதியத்தின் செலவுகளைத் தாங்கிக் கொள்வதற்கு வேண்டிய பணம் தேவைக்கேற்ப திணைக்களத்தின் வசமுள்ள நிதியத்திலிருந்து பெற்று வருட இறுதியில் மீள்நிரப்பப்படும். அதற்கு மேலதிகமாக நிதியத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியம் பொறுப்புச் சபை ஒன்றினால் நிருவகிக்கப்படவதுடன் தலைவராக நிரல் அமைச்சின் செயலாளரும், பொறுப்புச் சபையின் செயலாளராக தேசிய தாவரவியற் பூங்காத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமும், பொறுப்புச் சபையின் உறுப்பினராக பொதுத் திறைசேரியின் வரவு செலவுத் திட்டப் பணிப்பாளரும் பணியாற்றுகின்றனர்.

**அறிமுகம்**

1.நிதியத்தின் பெயர் : இலங்கையில் தாவரவியற் பூங்காக்களின் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நம்பிக்கை நிதியம்

2.பண்பு : தாவரவியற் பூங்கா அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் புனருத்தாபன நடவடிக்கைகளுக்கு நிதியுதவிகளை வழங்குதல்

3.தொடர்புடைய சுற்றறிக்கைகள் : I நிதியத்தின் ஆரம்பம்- 1917ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நிதியங்கள் கட்டளைச் சட்டத்திற்கமைவாக

II கணக்கு வைத்தல் மற்றுமு் அறிக்கையிடல் திறைசேரிச் சுற்றிக்கை 1977ஆகஸ்ட் மாதம் 16 ஆம் திகதிய 836 ஆம் இலக்க சுற்றறிக்கை

4.ஆரம்பிக்கப்பட்ட திகதி : 1996 திசெம்பர் 20

5.அலுவலகம் : பேராதனைத் தேசிய தாவரவியற் பூங்காக்கள் திணைக்களத்தின் தலைமைக் காரியாலயம்

6.வங்கி : இலங்கை வங்கி பேராதனைக் கிளை

**கணக்கிலக்கம் 0007040848**

**7. நிதியத்தின் குறிக்கோள்கள்:**

- இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தாவரவியற் பூங்காக்கள் தொடர்பாக நிலவும் தோற்றப்பாட்டினை மேலும் சிறப்படையச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- சூழல் கல்வி மற்றும் தாவரங்கள் தொடர்பாக தற்போது நிலவும் பாதுகாப்பு தொடர்பாக கருத்தாழமிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு முன்னெடுத்துச் செல்லல்.
- தாவரவியற் பூங்காக்களில் பணிபுரியும் விஞ்ஞானிகளின் விஞ்ஞான அறிவு, செயற்பாடுகள் மற்றும் வசதிகளை மேம்படுத்துவதைப் போன்று குறித்த நடவடிக்கைகளுக்கு வேண்டிய உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதியுதவிகளை மேற்கொள்ளல்.
- தாவரச் சேர்க்கைகள் தொடர்பாக விருத்தியுடன் கூடிய வேலை ஒழுங்கினை மேற்கொள்ளல்
- தாவரவியற் பூங்காகக்களின் பயனுக்காக சூழற்கல்வி பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் தொழில்நுட்பத் துறையில் செயற்படுகளை விருத்தி செய்தல் மற்றும் அதற்கு உதவி செய்தல்.
- விஞ்ஞானிகளுக்கும் மற்றும் தாவரவியற் பூங்காகக்களுக்கு வருகைதருவோருக்கு வேண்டிய வசதிகளை வழங்குவதற்கு வேண்டிய சகல அவசர கட்டட நிருமாண நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- வேண்டியபோது புனருத்தாபன ஒதுக்கங்களிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்தல்.

## 2013இல் நிதியத்தின் நிதி முன்னேற்றம்

2013/01/01 இல் வரவு மீதி = ரூபா. 62,715,391.60

**சேர்க்கப்பட்டது:**

2013 இற்கான வருமானம் (வரவு) = ரூபா. 132,957,387.02

--------------------

மொத்தம் ரூபா. 195,672,778.62

**கழிக்குக :**

2013 இற்கான வருமானம் (செலவு)= ரூபா. 86,335,273.76

--------------------

2013/12/31 இல் திறைசேரி மீதி = ரூபா. . **109,337,504.86**

* (இது ஒரு பெயரளவிலான மீதியாகும்.)

## நிதியத்தின் ஒதுக்கங்களைப் பயன்படுத்தி 2013 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட விசேட அபிவிருத்தி நடவடிக்கைகள்

- இந்த வருடத்தினுள் பூங்கா அலங்கரிப்பிற்காக தாவரவியற் பூங்கா அபிவிருத்தி நிதியத்தின் கீழ் ஒதுக்கம் மேற்கொண்டு பேராதனை அரச தாவரவியற் பூங்கா மற்றும் ஹக்கலைப் பூங்கா என்பன மிகவும் கவர்ச்சிகரமான மட்டத்தில் நடாத்திச் செல்லப்பட்டுள்ன.



அரச தாவரவியற் பூங்காவின் காட்சியொன்று

- பேராதனை அரச தாவரவியற் பூங்காவின் பிரதான பாதை 2.65 கிலோமீற்றர் தூரம் காபற் இடப்பட்டு மிகவும் சிறந்த மட்டத்தில் செய்யப்பட்டள்ளது. அதனால் பூங்காவின் எழில் மேலும் அதிகரிப்பதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது.



அரச தாவரவியற் பூங்காவின் பாதைகள் மேம்படுத்தப்படல்



பழைய கட்டடம்



புதிய நலன்புரி சிற்றுண்டிச்சாலைக் கட்டடம்



பேராதனைத் தாவரவியற் பூங்காவின் கள அலுவலகக் கட்டடம்

- பேராதனை அரச தாவரவியற் பூங்காவிலே கள நடவடிக்கைகளை செயற்றிறனாக மேற்கொள்வதற்காக துறைரீதியான அலுவலகமொன்றை நிருமாணிப்பதற்காக தாவரவியற் பூங்கா நிதியத்தின் கீழ் ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனை இவ்வாண்டின் ஒதுக்கத்தினைப் பயன்படுத்தி மிகவும் வெற்றிகரமாக நிருமாணிக்கப்பட்டுள்ளது.

- இந்தத் கள அலுவலகத்தில் பிரதான தொழிலாளரின் அறை, தச்சு வேலைத்தளம், இரும்பு வேலைத்தளம், எந்திரிவியல் பிரிவு, லேபல் எழுதும் அறை, தாவரப் பராமரிப்புப் பிரிவு என்றவாறு சகல துறை அலுவலகங்களையும் ஒரே இடத்தில் அமைத்து ஊழியர் நலன்புரி நடவடிக்கைகளுக்காக ஆண் பெண் இருபாலருக்கும் வெவ்வேறாக உன்மாற்றுவதற்கான அறை மற்றும் உணவு மற்றும் தேநீர் குடிப்பதற்கான வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

- பேராதனை அரச தாவரவியற் பூங்காவின் கீழ்க்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் கீழ் பழைய மலசலகூடத் தொகுதிய நவீனமயப்படுத்தி மேம்படுத்துவதற்கு ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி தாவரவியற் பூங்காவினைப் பார்வையிடுவதற்கு வரும் உல்லாசப் பிரயாணிகளின் ஆரோக்கிய நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை இவ்வாண்டில் வழங்கப்பட்டுள்ளது.



பேராதனைத் தாவரவியற் பூங்காவின் வாசனைத் திரவியத் தோட்டத்துக்கண்மையில் அமைந்துள்ள கழிவறைகள்

- அரச தாவரவியற் பூங்காவின் அந்தூரியம் பாத்தியில் தாவரக் குடில் ஒன்றை நிருமாணித்தல் மற்றும் மலர்நடுதல் பிரிவில் இழையவிருத்தி ஆய்வுகூட வடிகாலமைப்பினைப் பழுதுபார்த்தல், கெக்டஸ் குடிலைத் திருத்துதல் பொன்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் இவ்வாண்டில் நிதியத்தின் ஒதுக்கத்தினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்கீழ் பூங்காவில் தாவர உற்பத்திப் பிரிவு மற்றும் பொதுமக்களுக்குப் பார்வையிடக் கூடிய இடங்கள் (கெக்டஸ் குடில்) போன்றவை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

- நிதியத்தின் கீழான ஒதுக்கத்தினைப் பயன்படுத்தி 2012 ஆம் ஆண்டில் இந்தத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஹதபிம அதிகாரசபையின் கட்டடம் இவ்வாண்டில் பழுதுபார்க்கப்பட்டது.

ஹதபிம அதிகார சபையிடமிருந்து பெற்று மேம்படுத்தப்பட்ட அலுவலகக் கட்டடம்





இந்தக் கட்டடத்தை வழங்க முன்னர் தலைமை அலுவலக ஊழியர்களுக்கு அவர்களது பணிகளை மேற்கொள்வதற்குப் போதியளவு வசதிகள் காணப்படவில்லை. இச்சந்தர்ப்பததில் இந்தக் கட்டடத்தைப் பெற்றுக் கொண்டு கீழ்மாடியை அபிவிருத்தி செய்து அலுவலர்களின் மேம்படுத்துவதற்கு நிதியத்திற்கு முடியுமானது. அபிவிதுத்தியின் பின்னர் 2013 ஆம் ஆண்டின் இறுதி அரையாண்டு முதல் திணைக்களத்தின் ஸ்தாபனப் பிரிவு இதில் நிறுவப்பட்டுள்ளது.

பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாட்டின் போது பேராதனை அரச பூங்காவினைப்' பார்வையிட வருகை தந்த அரசதலைவர்கள் மற்றும் அவர்களுடைய பரிவாரங்கள் பேராதனை தாவரவியற் பூங்காவினுள் உலாவருவதற்காக பட்டறியில் இயங்கும் GOLF CART வண்டிகள் 06 இனைக் கொள்வனவு செய்வதற்கு நிதியத்தினால் ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டது.

பின்பு இந்த வாகனம் தாவரவியற் பூங்காவினைப் பார்வையிட வரும் உல்லாசப் பிரயாணிகளின் வசதிக்காக மணித்தியலத்திற்கு ரூபா.500 படி தொகையை அறவிட்டு உல்லாசப் பிரயாணிகளின் பிரயாணவசதிக்காக பயன்படுத்தப்படுகின்றது. அதன்படி மூன்று வாகனங்கள் பேராதனைத் தாவரவியற் பூங்காவுக்கு மற்றும் ஏனைய மூன்று வாகனங்கள் ஹம்பாந்தோட்டை உலர்வலய பூங்காவில் சேவைக்காககப் பயன்படுத்தப்படுகின்றது. இந்த வாகனங்களிலிருந்தான வருமானம் தாவரவியற் பூங்கா நிதியத்தின் வருமானமாகக் கணக்கிடப்படும். அதன்படி நிதியத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட GOLF CART வண்டிகள்

அரச தாவரவியற் பூங்காவினுள் காணப்படும் கல்வி மற்றும் பயிற்சி நிலையகத்திலே பயற்சி வழங்கும் நடவடிக்கைகளில் தோட்ட அலங்காரத் திட்டம் தயாரிக்கும் போது வரைபடம் தயாரிப்பதற்கான மென்பொருள் பாவனைக்குப் பொருத்தமான கணணிகள் 10 கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு நிதியத்தினால் ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி பயிலுநர்களைப் பயிற்றுவிப்பதற்காக பயிற்சி நடவடிக்கைகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.



புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட கணணிகள்

**ஹக்கல தாவரவியற் பூங்காவிலே பல அபிவிருத்தி நடவடிக்கைகள் நிதியத்தின் ஒதுக்ககங்களைப் பயன்படுத்தி மெற்கொள்ளப்பட்டுள்ளன.**

பூங்காவினுள் காணப்படும் பாதைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கும் தோட்ட அலங்காரத்தை மேம்படுத்துவதற்கும் “இன்டர்லொக்ஸ் (Interlocks)” இட்டு உட்பாதை வலையமைப்பினை அபிவிருத்தி செய்யப்பட்டது.

அன்படி ஹக்கல தாவரவியற் பூங்காவினை பார்வையிடவரும் உல்லாசப் பிரயாணிகளுக்கு வசதியாக நடந்து சென்று பூங்காவினைப் பார்வையிட வசதியளிக்கப்பட்டுள்ளது.



உட்பாதை வலையமைப்பு “இன்டர்லொக்ஸ்’’ மூலம் அபிவிருத்தி செய்யப்படல்

பூங்காவின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக மற்றும் குடிநீர் தேவைகளுக்காக பூங்காவின் உயர் ஊற்றுக்கள் மூலம் குழாய்வழி மூலமாக இந்தப் பிரதான தடாகத்திற்கு நீரைப் பெற்று இந்தத் தடாகம் மூலம் பயன்படுத்தப்படுகின்றது. இந்தப் பிரதான தடாகம் மிகவும் பழைமையானதுடன் பூங்காவை ஆரம்பிக்கும்போது நிருமாணிக்கப்பட்டது. பல நூற்றாண்டு பழைமைவாய்ந்த இந்த தடாகத்தில் நீர் கசிவொன்று காணப்பட்டதால் நிதியத்தின் ஒதுக்கத்தைப் பயன்படுத்தி பழைமையையும் பாதுகாத்து திருத்தப்பட்டுள்ளது.


நீர்த்தொட்டி பழுதுபார்த்தல் நடைபெறும் விதம்

காணி அபிவிருத்தி நடவடிக்கைகளின் கீழ் பூங்காவின் கழிவுநீரை முறையாக வெளியேற்றுவதற்காக வடிகாலமைப்பொன்றினை நிருமாணித்தல் இவ்வாண்டு நடைபெறும். இதன்மூலம் பூங்காவின் பாதைகள் மழைகாலத்தில் கழுவிச் செல்லப்படுதலைத் தடுக்க முடியுமாகவுள்ளது.



தாவரவியற் பூங்காக்களிலுள்ள ஊழியர்களின் அறிவை மேம்படுத்துவதற்காக தாவரவியற் பூங்காகக்களில் பல்வேறு மட்டங்களில் பணியாற்றும் அலுவலர்களினதும் பணியாளர்களினதும் அறிவு மற்றும் நவீன முறைகள் தொடர்பான அறிவினை மேம்படுத்துவதற்காக பயற்சி மற்றும் செயலமர்வுகளுக்கு பங்குபற்ற வாய்ப்பளிக்கப்பட்டது.

- திணைக்களத்தின் தாவரவியல் விஞ்ஞான பரிசோதனை நடவடிக்கைகளின் கீழ் தாவரக் கண்டுபிடிப்பு நடவடிக்கைகள், தாவரங்களை அடையாளங்காணுதல் நடவடிக்கைகள் மற்றும் தாவரக் காட்சிப்படுத்தல் ஒன்றுசேர்த்தல் நடவடிக்கைகள் இவ்வாண்டில் போதியளவு நடாத்தப்பட்டன.



தாவரக் கண்டுபிடிப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் சந்தர்ப்பம்



தாவரக் கண்டுபிடிப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் சந்தர்ப்பம்

## நிதியத்தின்கீழ் 2013 ஆம் ஆண்டில் நிலைவேற்றப்பட்ட விசேட அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான சாராம்சம்

| நடவடிக்கை | செலவு (ரூபா) |
|---|---|
| 1.தாவரவியற் பூங்கா வசதிகளை மேம்படுத்தல், தோட்ட அலங்கார நடவடிக்கைகள் | 4,496,599.00 |
| 2. தாவரவியற் பூங்காக்களில் காணி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | 19,249,946.00 |
| 3. தாவரவியற் பூங்காக்களில் கட்டட அபிவிருத்தி நடவடிக்கைகள் | 27,896,552.00 |
| 4.வசதிகளை மேம்படுத்துவதற்காக உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் (பற்றரி சக்தியால் இயங்கும் 8 ஆசனங்களைக் கொண்ட 06 கார்கள் உட்பட) | 15,283,130.00 |
| 5.பரிசோதனை மற்றும் பயிற்சி நடவடிக்கைகள் மற்றும் நூலகவசதிகளை மேம்படுத்தலுக்காக | 500,000.00 |
| **மொத்தம்** | 67,426,227.00 |

பேராசிரியர் விலீ கமகே

தலைவர், தாவரவியற் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம் மற்றும்

செயலாளர், தாவரவியற் பூங்காக்கள் மற்றும் பொதுக் களியாட்ட

அலுவல்கள் அமைச்சு

பேராசிரியர் டீ.எஸ்.ஏ. விஜேசுந்தர

செயலாளர், தாவரவியற் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம்

பணிப்பாளர் நாயகம், தேசிய தாவரவியற் பூங்காக்கள் திணைக்களம்